**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.107 /2022</u>**

**<u>நாள் : 18.03.2026</u>**

**ம.சா.** 1 **திருமதி.செல்வி**

1, 2 **ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

**(காயம்பட்ட இளவரான சஞ்சய் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.காயம்பட்ட சிறுவனின் உதடு அமைப்பு சிறிதளவு மாறுட்டிருந்தது. அதுபற்றி கேட்டதற்கு விபத்தில் சிறுவனுக்கு மேல் அன்னத்தில் முந்தைய 2 பற்கள் விழுந்துவிட்ட நிலையில் வேர் சிகிச்சை செய்யப்பட்டதாக கூறுகிறார். அத்துடன் சிறுவனுக்கு விபத்தில் காயம்பட்டு கன்னம் மற்றும் உதட்டு பகுதியில் வீங்கியிருந்ததால் 3 மாத கால கட்டத்திற்கு சிறுவனால் சரிவர சாப்பிட இயலவில்லை என்று தெரிவிக்கப்பட்டது)**

**விபத்தினை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு 10 நாட்கள் கழித்துதான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது மகன் சிகிச்சையில் இருந்தார். எனக்கு உதவிக்கு யாரும் இல்லாததால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. அத்துடன் 1ஆம் எதிர்மனுதாரர் மருத்துவ செலவினங்களை பார்த்துக்கொள்வதாக சொன்னதால் புகார் கொடுக்கவில்லை. ஆனால் 1ஆம் மனுதாரர் தான் ஒப்புக்கொண்டபடி மருத்துவ செலவினங்கள் செய்யாததால் அதற்கு பின்னிட்டுதான் புகார் கொடுத்தேன். மேற்படி விவரத்தை காவல் நிலையத்தில் கொடுத்த புகாரிலும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்திலும சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் பற்றிய விவரங்களை எழுதி எஸ் பி அலுவலகத்தில் கொடுத்தோம். அங்கிருந்து ஜோலார்பேட்டை காவல் நிலையத்திற்கு அனுபபிவைத்தார்கள். புகாரில் கண்டுள்ள விவரங்களை போலீசார்தான் எழுதினார்கள். விபத்தை ஏற்படுத்தியவரின் முழு பெயர் பிரவீன்குமார். அவரது முழு பெயரை புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது மகன் பெயரி சைக்கிளில் அரை பெடலில் ஓட்டிச் சென்றான் என்றால் சரியல்ல, சிறிய சைக்கிளில் சென்றான் என்று சாட்சி கூறுகிறார். எனது மகன் பெரிய சைக்கிளில் அரை பெடலில் சென்றதால்தான் எதிரில் வரும் வாகனங்களை கவனிக்காமல் விபத்தை ஏற்படுத்திக்கொண்டான் என்றால் சரியல்ல. பிரவீன்குமார் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வேறு நபர்தான் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனது மகன்**

பள்ளத்தில் விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டான் என்றால் சரியல்ல. விபத்தானது ரோட்டில்தான் நடந்தது. எனது மகன் பள்ளத்தில் விழுந்ததால்தான் பல் விழுந்தது என்றால் சரியல்ல. அந்த ரோட்டில் பள்ளமே இல்லை என்று சாட்சி கூறுகிறார். எனக்கு விபத்து பற்றிய விவரமே தெரியாததால்தான் போலீசாரே புகாரை எழுதி அதில் பிரவீன்குமாரின் வாகனத்தை உட்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. விபத்து நாளிலேயே தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டு அன்றே வீட்டுக்கு வந்துவிட்டோம் என்றால் சரியல்ல. பின்னிட்டு யோசனையின்பேரில் மருத்துவமனையில் 4 நாட்கள் தங்கி சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. கீழே விழுந்த எனது மகனுக்கு உதவி செய்ய வந்த நபரைத்தான் இந்த வழக்கில் உட்படுத்தி இழப்பீடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பக்கத்து வீட்டுக்காரர்தான் உதவி செய்தார். விபத்து நடநத்வுடன் பிரவீன்குமார் தப்பித்து ஓடிவிட்டார். அத்தோடு பிரவீன்குமாரின் பெற்றோர் மருத்துவ செலவுகளை ஏற்றுக்கொள்வதாக கூறிவிட்டு கொடுக்காததால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 18 வயது பூர்த்தியடைந்தால்தான் ஓட்டுநர் உரிமம் வழுங்கமுடியும் என்றால் சரிதான். 2ஆம் எதிர்மனுதாரருக்கு 18 வயது ஆனதால்தான் ஓட்டுநர் உரிமம் வழுங்கப்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரவீன்குமாரிடமிருந்து நஷ்டஈடு பெறும் நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் 2ஆம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.